IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 112/2024

dated : 04.11.2025

P.W.2

Name குணசேகரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை ஏதும் கிடையாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மீதுள்ள விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். ராஜ ராஜேஸ்வரி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். அவர் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். சுப்பிரமணி 1ம் பிரதிவாதி வெங்கடேசிற்கு எழுதி வைத்த உயில் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சுப்பிரமணியின் கையொப்பம் பற்றி தெரியாது. வழக்குரைச் சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை ஏதும் கிடையாது என்பதால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியமளிக்க வேண்டுமென்பதற்காகவே

நான் நீதிமன்றம் ஆஜராகியுள்ளேன் என்றும் எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

**14 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தமதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.04 17:44:22 +0530